interlinking Arni and Korteliyar at two or more feasible prints and also for constructing sufficient number of check dams at the appropriate places in the Korteliyar river course:

AND WHEREAS such re-charge will enable optimum utilisation of ground water and formation of hydraulic barrier against sea water intrusion; "

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

நெடுந்தலைப்பு, பேரவையின முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''சென்னைப் பெருநகர்ப் பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1987) திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு, திருத்தப் பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.

1. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஔ) பேரவையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் குறித்த விவரங்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எட்டாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடர் 27-2-1987 ஆம் நாளன்று தொடங்கியது: இன்று வரையில் அக்கூட்டத் தொடர் நடைபெற்றுள்ளது.

பேரவையில் 27-2-1987 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் உரையாற்றினார்கள்.

இக் கூட்டத் தொடரில் பேரவை கூடிய மொத்த நாட்கள்	44
மாலையிலும் பேரவை கூடிய நாட்கள்	13
அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம்.	210 மணி 45 நிமிடங்கள்.
ஆளுநர் உரை மீது விவாதம் நடைபெற்ற நாட்கள்	6
அவ் விவாதத்தில் பங்கு கொண்ட உறுப்பினர்கள்	70

1987 மே 11]

நிதி அலுவல்கள்:

1987–88 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் பேரவையில் அளிக்கப் பெற்ற நாள்	20–3–1987
வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள் ..	7
பங்கு கொண்ட உறுப்பினர்கள்	74
மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும் நடைபெற்ற மொத்த நாட்கள்	24
கொடுக்கப் பெற்ற வெட்டுத் தீர்மானங்கள்.	3,383
அவை முன் வைக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள்	3,187
விவாதித்து நிறைவேற்றப் பெற்ற மானியக் கோரிக்கைகள்	59
உறுப்பினர்கள் ஆற்றிய மொத்த உரை ..	321

வினாக்கள்-விடைகள் :

உடுக்குறியிட்ட வினாக்கள்	623
உடுக்குறியிடாத வினாக்கள்	600
துணை வினாக்கள்	1,827

கவன ஈர்ப்பு:

அனுமதிக்கப் பெற்றவை	553 (456 பொருள் பற்றி.)
அவையில் எடுத்துக் கொள்ளப் பெற்றவை.	336 (289 பொருள் பற்றி.)

உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள்:

அறிவிப்பு வரப் பெற்றவை	4
ஆய்வில் உள்ளவை	2
உரிமைக் குழுவிற்கு அனுப்பப் பெற்றவை,	2
உரிமைக்குழு கூடிய நாட்கள்	3

அரசினர் சட்ட முன் வடிவுகள்:

ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பெற்றவை.	39
நிறைவேற்றப் பெற்றவை	39

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சட்டமன்றப் பேரவைக் குழுக்கள்:

16–5–1986 முதல் 11–5–1987 வரை—

	கூடிய நாட்கள்.	அளித்துள்ள அறிக்கைகள்
(1)	(2)	(3)
மதிப்பீட்டுக் குழு	40	4
பொதுக் கணக்குக் குழு	48	28
பொது நிறுவனங்கள் குழு	50	21
அவைக் குழு	9	..
அரசு உறுதிமொழிக் குழு	21	2
அலுவல் ஆய்வுக் குழு	8	..
சட்ட விதிகள் ஆய்வுக் குழு	37	3
மனுக்கள் குழு	33	3
சட்ட மன்றப் பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள் குழு	13	3
நூலகக் குழு	1	..
காமன்வெல்த் பாராளுமன்றக் குழு.	6	..

பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்:

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்	108
(ஆ) அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்	230

பார்வையாளர்கள்.

மாடத்தில் அனுமதிக்கப் பெற்ற	ஆண்கள்..	11,668
	பெண்கள்	1,598
தலைவர் மாடத்தில் அனுமதிக்கப் பெற்றவர்கள்		10,231
பேரவை நிகழ்ச்சிகளைக் காண வருகை தந்தோர் மொத்த எண்ணிக்கை . ..		23,497

1987 மே 11] [பேரவைத் தலைவர்]

நூலகம்: 1,269

சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர்.

வழங்கப்பெற்ற நூல்கள் 610

நடவடிக்கைக் குறிப்புகள்:

தட்டச்சு செய்யப் பெற்ற மொத்தப் பக்கங்கள் 10,528

சிறந்த முறையில் பேரவை நிகழ்ச்சிகள் நடைபெற ஒத்துழைப்பு நல்கிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் பாராட்டு தெரிவிப்பதுடன் அவர்களுக்கு என் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையை நடத்திச் செல்வதில் உதவியாக இருந்த பேரவை துணைத் தலைவர் மாண்புமிகு திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும் மாற்றுத் தலைவர் திருவாளர்கள் மா. சின்னராசு, டாக்டர் கே. சமரசம், கே. குப்புசாமி, செ. செம்மலை, டி. ஆர். வேங்கடரமணன் ஆகியோருக்கும் என் நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும், எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் கட்சிகளின் கொறடாக்களுக்கும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சீரிய முறையில் பேரவை நிகழ்ச்சிகளை நடத்திச் செல்ல ஒத்துழைப்பு தந்த மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கும், மற்றும் அமைச்சர் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள் ஆகியவற்றின் செய்தியாளர்களுக்கும் என் பாராட்டுதல்கள்.

நம்முடைய பேரவைச் செயலகத்தின் ஆணையர் மற்றும் செயலாளர் திரு. சி. கு. இராமசாமி அவர்கள் என்னுடன் மிகவும் ஒத்துழைத்தார்கள். அவர்களுக்கும், சட்டமன்றப் பேரவை அனைத்து அலுவலர்கள், பாதுகாப்பு அலுவலர்கள் ஆகியோருக்கும் அவர்கள் ஆற்றிய சீரிய பணிகளுக்காகப் பேரவை மூலம் என் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.